# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 3-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 06 வெள்ளிக்கிழமை (19 - 05 - 2000) VALAMPURI ஒலி: 151


★ நேற்றைய ஊரடங்கால்

# யாழ். குடாநாடு ஸ்தம்பிதம்

# குண்டினால் நகர் அதிர்ந்தது!

## மக்கள் நடமாட்டம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ், குடாநாடு முழுவதும் நேற்று அமுல் படுத்தப்பட்ட 24மணி நேர ஊரடங்குச் சட்டத்தினால் யாழ்நகரும், அதனை அண்டிய பகுதிகளும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

பலாலி இராணுவத் தலைமையகம் விடுத்த அறிவிப்பு ஒன்றின் மூலமே இந்த ஊரடங்கு நேற்று அமுல்படுத்தப்பட்டது,

நேற்று முழுநாளும் யாழ். குடாநாட்டில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவினால் யாழ்நகரின் பிரதான வீதிகளான காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, கண்டி வீதி ஆகியன மக்கள் போக்குவரத்தோ வாகனப்போக்குவரத்துக்களோ இன்றி சூனியப் பிரதேசமாகக் காணப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன: பிரதான சந்தைகளான திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம் ஆகியன முற்று முழுதாக இயங்கவில்லை.

இதேவேளை யுத்த விமானங்கள் புலிகளின் நிலை

[2 ஆம் பக்கம் பார்க்க]

## பயணிகள் கப்பல்சேவை

(திருகோணமலை)

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்குப் பயணிகள் கப்பல் சேவை இரண்டொரு தினங்களில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் செல்வதற்காக திருமலையில் மாதக்கணக்காக காத்து தவம் இருந்த மக்களுக்கு இப்பயணிகள் கப்பல் சேவை மூலம் அவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு வழி பிறக்குமென சொல்லப்படுகிறது: (வ)

ஊரடங்கு வேளையில்

## ஆத்திசூடி வீதியில் இளைஞர் சூட்டுக்குப் பலி

(யாழ்ப்பாணம்)

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளை தெருவில்சென்ற இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் ஆத்திசூடி வீதியால் சென்ற காரைநகரைச் சேர்ந்த 24 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவராவார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

நேற்று காலை 10 மணியளவில் இளைஞர் ஒருவர் இராணுவத்தினர் கூப்பிட்டபோது ஆத்தி சூடி வீதியில் ஓடி வந்து கடை ஒன்றினுள் நுழைந்தார்என்றும் அப்போ

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தளபதிகளை 'தளுவத்த' சந்தித்தார்

(கொழும்பு)

இலங்கை இராணுவக் கூட்டுப்படைத் தளபதி றோகான் தளுவத்த நேற்று முன்தினம் இந்தியா பயணமாகியுள்ளார்.

சென்னையில் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்திய பின்னர் தனிவிமானம் ஒன்றில் பெங்களூர் பயணமாவார் என்றும் அங்கு இராணுவ விமான தொழிற்சாலை உட்பட பல இடங்களிற்கும் விஜயம் மேற்மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தென்னிந்தியக் கடலோ

(2ஆம் பக்கம் பார்க்க]

## இலங்கை இனபிரச்சினைவிடயத்தில் இந்தியாவுக்கு பெரும் பொறுப்புண்டு

(சென்னை]

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவுக்குப் பெரும் பொறுப்புண்டு என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் அமெரிக்கா இந்தியாவுடன் நெருங்கிய முறையில் ஆலோசனை நடத்துவதாகவும் இராணுவ ரீதியில் தலையிடப்போவ

[2ஆம் பக்கம் பார்க்க]

யாழில் மோதல் இடம்றெும் போது

## றோகான் தளுவத்த ஏன் இந்தியாவுக்கு வந்தார்?

(சென்னை)

இலங்கையின் யாழ்குடாவில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வரும் இச்சந்தர்ப்பத்தில் இலங்கை இராணுவத்தின் கூட்டுப்படைத் தளபதி றோகான் தளுவத்த எதற்காக இந்தியாவுக்கு வந்திருக்கிறார் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் கூட்டுப்படைத்தளபதி றோகான் தளுவத்த இந்தியா வந்திருப்பது ஏன் என்று பிரதமர் வாஜ்பாய்க்குக் கடிதம் ஒன்றையும் அவர் எழுதியுள்ளார்

(வ)

## செய்தி ஆசிரியர் விசாரணையில்

பாதுகாப்பு சம்மந்தமான செய்திகளை ஒலிபரப்புச் செய்த ரி.என்.எல். தொலைக்காட்சிச் செய்தி ஆசிரியர் நேற்று சி.ஐ.டி. பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

★ கொட்டாஞ்சேனையில்

## தமிழ்வர்த்தகர் ஒருவரும் பெண்மணியும் கைது!

(கொழும்பு]

கொட்டாஞ்சேனையில் பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவரும் வீட்டு உரிமையாளரரான பெண் ஒருவரும் கொட்டாஞ்சேனைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பம்பலப்பிட்டியில் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தபோது அவ்வீளைஞர் சைனட் அருந்தியதாகவும் அவரை உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதித்து அவரைத் தப்பவைத்த பின்னர் அவ்விளைஞர்கொடுத்த தகவலை அடுத்தே மேற்படி தமிழ் வர்த்தகரும் வீட்

(2ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனவிவகாரம் குறித்து வை.கோ, கனடா தூதுவர்சந்திப்பு

(சென்னை)

யாழ் குடாநாட்டில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்தம் தீவிரமடைந்துள்ள நிலையில் இந்தியாவுக்கான கனடா நாட்டுத் தூதுவர் இலங்கைப் பிரச்சினை குறித்து நேற்று மறுமலர்ச்சி திராவிட முன்நேற்றக்கழகத் தலைவர் வைகோபாலசாமியைச் சந்தித்து

( 2ஆம் பக்கம் பார்க்க)

★ தமிழக அகதிமுகாமில்

## அடிப்படை வசதியின்றி இல. தமிழ் அகதிகள்!

(சென்னை)

இலங்கையில் இருந்து தமிழகம் சென்ற ஆயிரக்கணக்கான மக்கள் அகதி முகாம்களில் அடிப்படை வசதிகள் இன்றி பெரும் இன்னல்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் தற்போது தொடரும் யுத்தத்தை அடுத்து தமிழ் மக்கள் பெருமளவில் அகதிகளாகத் தமிழகம் செல்வதுதெரிந்ததே. (வ)

## கைதடியில், துப்பாக்கிப் பிரயோகம் இரண்டு பேர் பலி; எட்டுப்பேர் காயம்

(புலோலி)

கைதடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஷெல் தாக்குதல் துவக்குச் சூடு போன்ற சம்பவங்களில் இரண்டுபேர் கொல்லப்பட்டனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந் சிவாஜினி என்பவரும் அவரது சகோதரனுமே இவ்வாறு கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்களின் சடலம் நீர்வேலி பொலிசாரினால் யாழ். போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எட்டுப்பேர்

(2ஆம் பக்கம் பார்க்க)

★ புலிகளும் அரசாங்கமும்

# நிரந்தர யுத்தம்புரிய முடியாது சமாதானத்திற்கான தருணம் இதுவே

## அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் நிரந்தரமாக யுத்தம் புரிந்து கொண்டிருக்க முடியாது. இரு தரப்பும் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை நடாத்த வேண்டிய வாய்ப்பான தருணம் இதுவே என வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பத்திரிகையாளர்களுடன் நேற்று முன்தினம் கொழும்பில்நடாத்திய சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையில் இரகசிய உடன்பாடு உள்ளது என்று கூறப்படுவதினை அமைச்சர் கதிர்காமர் முற்றாக மறுத்துள்ளார். (க)

# மானிப்பாய் வைத்தியசாலையில் நோயாளர் அதிகரிப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது யாழ்மாநகரசபைப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இப்பகுதிகளில் அதிகளவில் தங்கியிருப்பதாலேயே சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம்அதிகரித்து வருகிறது. [021-ந]

★ மட்டு - திருமலை வீதியில் ஐஸ்கிறீம் சைக்கிளில்

# சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பு

# 22 பேர்பலி; 60 பேர்காயம்!

(மட்டக்களப்பு]

மட்டக்களப்பு திருமலை வீதியில் பொலிஸ் விடுதிக்கு முன்பாக குண்டொன்று வெடித்ததில்22பேர் கொல்லப்பட்டனர். 60 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்

காயமடைந்து சிகிச்சைக்காக ஆஸ்ாத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட 22 பேரில் 16 பொது மக்களும் 6 இராணுவத்தினரும் ஒரு பொலிஸாரும் அடங்குவர்

நேற்றுப் பிற்பகல் 5.50 மணிக்கு நடைபெற்ற இக் குண்டு வெடிப்புச் சம்பந்தமாக தெரியவருவதாவது; மட்டக்களப்பு திருமலை வீதியில் உள்ள பொலிஸ் விடுதிக்கு முன்பாக உள்ள விகாரை ஒன்றிற்குச் சமீபமாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளில் கட்டப்பட்டிருந்த ரெஜிபோமில் குண்டு இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து குண்டைச் செயலிழக்கவைக்கும் நிபுணர்கள்வர முன் அக்குண்டுவெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவின் பணிப்புரையை அடுத்து நாட்டின் நன்மை கருதி இச்செய்தி நேற்றுவெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

★ பாதுகாப்பு சம்மந்தமான

# ஆலோசனை வழங்க இந்திய அதிகாரி வருகிறார்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் தொடரும் யுத்தத்தையடுத்து பாதுகாப்பு சம்பந்தமான ஆலோசனைகளை இலங்கை அரசுக்கு வழங்க பஞ்சாப் மாநில முன்னணி பொலிஸ் பணிப்பாளர் நாயகமும் பயங்கரவாத ஒழிப்பு நிபுணருமாண கே. வி. எஸ் ஹில் கொழும்பு வரவுள்ளார்.

ஹில் கொழும்பு வருகை முக்கியமாக கொழும்பு நகரில் உள்ள முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்க்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பான ஆலோசனை வழங்கவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா உட்பட மற்றும் அரசியல் தலைவர்களுக்கு கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதும் தெரிந்ததே. (வக)

★ கைதடி மோதலையடுத்து

# முட்டை முடிச்சுகளுடன் அகதிகள் பெருமளவில் இடம்பெயர்ந்தனர்

கைதடிப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரச துருப்புகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மூண்ட மோதலை அடுத்து அப்பகுதியை சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் அங்கிருந்து இடம்பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

கைதடியிலிருந்து நீர்வேலி தரவைப்பகுதி யூடரக பெருமளவு மக்கள் வண்டில்கள், லொறிகள், டிரக்டர்கள் சகிதம் சாரிசாரியாக இடம் பெயர்கின்றனர்.

முட்டைமுடிச்சுகளுடன்ஆண்கள், பெண்கள், சிறு குழந்தைகளுடன் இடம்பெயர்ந்து செல்லும் காட்சி பெரும் சோகக் காட்சியாக இருந்தது.

தமது வீட்டுப் பிராணிகளான நாய்கள், ஆடுகள் போன்றவற்றையும்கூட இவர்கள் தம்முடன் அழைத்துச் செல்கின்றனர்.

நீர்வேலி, சிறுப்பிட்டி, ஆவரங்கால் போன்ற இடங்களை நாடி இவர்கள் சென்ற இவர்கள் பிள்ளையார் கோவில், நீர்வேலி வாய்க்காற்றரலைப் பிள்ளையார் ஆலயத்தில் தங்கி இளைப்பாறியச் சென்றவண்ணம் இருந்தனர். (க)

### இலங்கை...

தில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை அமெரிக்கா புரிந்து கொண்டுள்ளதாகவும் தெற்காசியாவுக்கான அமெரிக்க வெளியுறவுதுணை அமைச்சர் கோல் இன்ரபோட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நோர்வே அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளை அமெரிக்கா ஆதரிப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந)

# ஊர்காவற்றுறையில் நோயாளர்அவதி

[ஊர்காவற்றுறை]

யாழ்ப்பாணத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தினால் ஊர்காவற்றுறைவைத்தியசாலை இயங்க முடியாதுள்ளது.

இவ் வைத்தியசாலைக்கான வைத்திய அதிகாரி யாழ்ப்பாணத்திலிருந்து செல்ல முடியாத காரணத்தினால் கடந்த ஒருவார காலமாக வைத்தியர் இன்றி இப்பகுதி நோயாளர் பெரும் கஸ்ாங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன: (ந-75)

### இத்தியத்..

ரப் பாதுகாப்பைத் தீவிரப்படுத்துவது சம்பந்தமாக கடற்படைத்ளபதி, மற்றும் தளபதிகளைச் சந்தித்துப் பேசுவார்.

இன்றைய யுத்த சூழ் நிலையில்இராணுவத் கூட்டுதத்ளபதியின் இந்திய விஜயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென இராணுவ விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

றோகான் தளுவத்த பெங்களூரில் சாயிபாபாவைத் தரிசித்து கொழும்பு திரும்பும் வழியில் நேற்று சென்னை சென்று அங்குள்ள இராணுவக்கில்லூரிசளையும் பார்வையிடடபின் இன்று நாடு திரும்புவார். (வ)

### கொட்டாஞ்சேனை...

டுரிமையாளரான பெண் ஒருவரும் மேலும் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டதுடன் இரு லொறிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டுள்ள தமிழ் வர்த்தகரும் சைனட் அருந்தித் தப்பித்த இளைஞருக்கு வீடு கொடுத்த வீட்டு உரிமையாளரான பெண்மணியும் சி.ஐ.டி. பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். [வ]

### ஆத்திசூடி.,.

தேதுப்பாக்கியால் சுடப்பட்டார்என்று தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானவரின் சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது . (வ)

### கைதடியில்...

படுகாயமடைந்துள்ளனர்.

ஷெல் தாக்குதல்களினால் காயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு-

நமசிவாயம்சகுந்தலாதேவி (32 வயது), சுப்பிரமணியம் கஜமுகன் (24 வயது), சின்னத்தம் கந்தசாம்(50 வயது) மயிலன் சுப்பிரமணியம் (48 வயது), இவர்கள் அனைவரும் கைதடி மத்தியைச் சேர்ந்தவர்கள்.

மேலும் - துவக்குச் சூட்டினால் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு;

தம்பு நடேசு (43 வயது), நடேசு புவலினி (14 வயது), நடேசு தமிழினி (9 வயது) இவர்கள் கைதடி மத்தியைச் சேர்ந்தவர்கள்.

சின்னத்தம்பி சோதி (34 வயது) குமரன்வளவு கைதடி

இது தவிர நேற்று முன்தினம் கைதடிப் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களினால் காயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு- தயாளன் வாசுகி (37 வயது) கைதடி மத்தி, இராமமூர்த்தி கஜந்தி (27 வயது) கைதடி மத்தி, எழினி வல்லிபுரம் (24வயது) கைதடி வடக்கு. (ந-52)

யாழ். மாநகரசபை

# சுகாதார ஊழியருக்கு அவசர அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தற்காலிகமாக நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இயங்கவுள்ளது.

இங்குஅத்தியாவசிய சேவைகள் வழங்கப்பட உள்ளதால் சகல சுகாதார ஊழியர்களையும் இன்று காலை 9மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்படின் தவறாது துர்க்கா மணி மண்டபத்துக்குச் சமூகம் கொடுக்குமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஆர்.தெய்வேந்திரன் கேட்டுள்ளார். (ந)

# இலங்கை இனப்பிரச்சினையில் மத்திய அரசின்நிலையை தமிழகம் ஆதரிக்கும்!

## வெங்கையா நாயுடு

(சென்னை)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக மத்திய அரசு எடுக்கும் எந்தவித நடவடிக்கைகளுக்கும் தமிழகக்கட்சியினர்ஆதரவு தெரிவித்துள்ளதாக பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர் மத்தியில் பேசிய வெங்கையா நாயுடு மேலும் கூறுகையில்,

பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் ஆகியவற்றின் தலைவர்களும் இது தொடர்பாக ஆதரவு தருவதாகத் தெரிவித்துள்ளனர்.

# பாடசாலைகளில் மக்கள் தஞ்சம்

[மானிப்பாய்]

யாழ். மாநகரசபைப் பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள் ஆனைக்கோட்டை, மானிப்பாய், நவாலிப் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

மானிப்பாய்இந்துக்கல்லூரி மானிப்பாய் தெற்கு விவேகானந்தா பாடசாலை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலையம் ஆனைக்கோட்டை அ. மி. பாடசாலை மற்றும் நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயம் ஆகிய இடங்களில் பெருமளவு மக்கள் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணவசதிகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என்பதும் இங்கு மலசலகூட வசதிகள் இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-120)

### இலங்கை இன-.

உரையாடினார்.

சுமார் ஒன்றேகால் மணித்தியாலம் இடம்பெற்ற சந்திப்பில்பாகிஸ்தானுக்ான கனடா நாட்டுத் தூதுவரும் கலந்து கொண்டதுடன்,

பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதாகவும், சந்திப்பு பயனுள்ளதாக அமைந்ததாகவும் வை. கோ. சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார் (ந)

### யாழ். குடா.,.

களை குண்டு வீசித் தாக்கியதாகவும் ஆங்காங்கே இடம்பெற்ற மோதல்களை முறியடித்துவிட்டதாகவும் அரசுத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன;

இது இவ்வாறு இருக்க நேற்று இரவு சில மணிநேரம் இடம்பெற்ற பீரங்கி ஷெல் தாக்குதல் களினால் நகர் அதிர்ந்த வண்ணம் இருந்தது. இத்தாக்குதல்களின் போது இடைஇடையே ''பரா'' ஏவப்பட்டன. [வ]

### அன்புவாசகர்களே

நேற்றைய தினம் யாழ், குடாநாடு பூராகவும் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டதனால் 'வலம்புரி' உங்கள் கைகளில் தவழமுடியாது போய்விட்டது. அதற்காக வருந்துகின்றோம்.

நாட்டு நிலைமை காரணமாக இன்றும் வலம்புரி இரண்டு பக்கங்களில் வெளிவருகிறது. கட்டணமும் தற்காலிகமாகக் குறைக்கப்பட்டுள்ளது. (ஆ – ர்)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல: 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 19-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.